**அறிவாற்றல் கருமையமொன்றின் அடித்தளமாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல் செயற்திட்டம் - 2018**

---

அறிவாற்றல் கருமையமொன்றின் அடித்தளமாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 5037 - எல்கே நிதியளித்தல் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டியலின் 11(ஆ)(3) ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அவுஸ்திரேலிய நம்பிக்கை நிதியத்திற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூலை 18 ஆந் திகதிய ரீஎவ் 013267 ஆம் இலக்க அவுஸ்திரேலிய மானிய உடன்படிக்கையின் 11(ஆ)(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், உள்ளக மற்றும் உள் விவகாரங்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நிறைவேற்றல் முகவராகவும் அனைத்து மாகாண சபைகளின் மாகாணக் கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் அமுல்படுத்துதல் முகவராகவும் காணப்படுகின்றன. இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட அறிவாற்றலிற்கான அடித்தளமொன்றை வழங்குவதற்கு ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியின் அணுகுமுறை மற்றும் தரத்தினை உயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,845 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 139.11 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 13,000 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் நிதியளிப்புச்செய்யப்பட வேண்டுமென இணக்கப்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 5,845 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 39.11 மில்லியன் தொகை அவுஸ்திரேலிய நம்பிக்கை நிதியத்தினால் நிதியளிப்புச் செய்யப்பட வேண்டுமென இணக்கப்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2012 ஒக்தோபர் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2018 யூன் 30 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 09 மாகாண சபைகளின் மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சுக்களின் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்களுடன் இணங்கியதாக அறிவாற்றல் கரு மையமொன்றின் அடித்தளமாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல் செயற்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க செயற்திட்டத்தின் விவகாரங்களினை உண்மையாகவும் நியாயமானதாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது

அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களால் ஏற்கப்படும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால்

மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனா தொடர்பு | இணங்காமை | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 இன் எம்ஓஎவ்பி/ஈஆர்டீ /2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்கான ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை 2019 மார்ச் 31 இல் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2019 யூன் 13 இல் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பிரதான தேவைப்பாடொன்று பூர்த்தியாக்கப்பட வில்லை. | மாகாண ஒதுக்கீட்டுக் கணக்குகளினை பூர்த்திசெய்த பின்னர் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது. | சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தின் நிதி உடன்படிக்கையின் பட்டியல் 01 இன் பிரகாரம், ஆரம்ப மற்றும் இரண்டாந்த தர கல்விக்கான அணுகுதலை மேம்படுத்தல், கல்வியின் தரத்தை முன்னேற்றுதல் மற்றும் கல்விச் சேவைகளின் கட்டுப்பாடு மற்றும் வழங்குகையினை வலுப்படுத்தல் என்ற 03 பிரதான நோக்கத்தின் கீழ் பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளினை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை மத்திய வங்கியால் பிரசுரிக்கப்பட்ட இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளி விபரவியல் - 2019 இன் | செயற்திட்டத்தின் நோக்கங்கள் அடையப் | கட்டுப்படுத்த முடியாத காரணிகள் காரணமாக, மத்திய மாகாணத்திலுள்ள | கொள்கைத் தீர்மானத்திற்கான இலக்கங்களு |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம், நாட்டில் காணப்படும் 3,046 பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை 100 இனை விடக் குறைவாகக் காணப்படும் மத்திய மாகாணத்திலுள்ள அவ்வாறான 503 பாடசாலைகளினை உள்ளடக்கியுள்ளதென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும், 3,500 மாணவர்களினை விட அதிகமாகக் காணப்படும் 79 பாடசாலைகளில் அவ்வாறான 34 பாடசாலைகளினை மேல் மாகாணம் உள்ளடக்கியுள்ளது. மேலும், கல்வி அமைச்சிடமிருந்து கிடைக்கக் கூடிய தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது 21 மாவட்டங்களில் 101 பாடசாலைகள் மூடப்பட்டிருந்தது. | பெறவில்லை. | பாடசாலைகளுக் கிடையே 100 பிள்ளைகளை விடவும் குறைவாகக் காணப்படும் 501 பாடசாலைகள் காணப்படுகின்றமை உண்மையானது. | க்குப் பின்னால் காணப்படும் உண்மையான காரணிகளின புரிந்து கொள்வதற்கான கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | கல்வி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட தகவலின் பிரகாரம், 16,512 பாடசாலை அதிபர்கள் பதவிகளினை அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் உள்ளடக்கியிருந்ததுடன் அதில் 10,776 பாடசாலை அதிபர்கள் மாத்திரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவையில் தொடர்ந்தும் காணப்படுகின்றனர். | பாடசாலை நிர்வாகம் தொடர்பான பொறிமுறை முடக்கப்படக் கூடும். | கருத்துரை அளிக்கப்படவில்லை. | பாடசாலை நிர்வாக முறைமை வலுப்படுத்தப்படல் வேண்டும். |

**3.2 குறைப்பயன்பாட்டையுடைய வளங்கல்**

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பெறப்பட்ட தகவலின் பிரகாரம், செயற்திட்டக் காலப்பகுதியின் போது செயற்திட்ட நடவடிக்கைகளினை அமுல்படுத்துவதற்கு ரூபா 18,845 மில்லியன் கூட்டுத்தொகையான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் அதில், ரூபா 13,812 மில்லியன் மாத்திரம் 2018 திசெம்பர் 31 | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களினை அடைந்து கொள்ள முடியாது போகலாம். | செயற்திட்டத்தின் அங்கீகாரத்தின் கீழ் பாடசாலை அபிவிருத்தி சங்கங்களுக்கு மாகாண பாடசாலை அடிப்படையிலான கற்றல் அபிவிருத்தி மானிய (பீஎஸ்பீஎல்ஜஜி) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 242.68 | செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக நிதிகள் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>(i) மீளாய்வாண்டின் போது மத்திய மாகாணத்தின் மாகாணக் கல்வி அமைச்சுக்காக பொதுத் திறைசேரியினால் விடுவிக்கப்பட்ட ரூபா 1,557.73 மில்லியன் கூட்டுத்தொகையான ஒதுக்கீடுகளில், ரூபா 1,317.67 மில்லியன் தொகையொன்று மாத்திரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 240.06 மில்லியன் கூட்டுத்தொகையான செலவிடப்படாத வருமானம் 2018 திசெம்பர் 31 இல் மாகாண வலயக் கல்வி அலுவலகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.<br><br>(ii) ஊவா மாகாண, மாகாணக் கல்வி அமைச்சுக்கு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 180.42 மில்லியன் தொகையான கட்டுநிதியில், ரூபா 178.99 மில்லியன் தொகையொன்று மாத்திரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்பட்டிருந்தது. | | தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | |
| (ஆ) | கடன் வருமானத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக மாகாண கல்வி அதிகாரசபைகளினால் பயன்படுத்தப்பட்டிருக்காமை மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விபரமான கணக்காய்வு பரீட்சிப்பில் | குறித்துரைக்கப் பட்ட தரப்பினர்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் கிடைக்கப் பெறவில்லை. | சப்ரகமுவ மாகாண சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் தொடர்பில் பரீட்சித்து அறிக்கையிடுவதற்கு சப்ரகமுவ மாகாண சபையின் பிரதம செயலாளர் அறிவுறுத்தப் பட்டிருக்கின்றார். | சொத்துக்கள் மற்றும் ஏனைய கருவிகள் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |

வெளிப்படுத்தப்பட்டது.

(i) சப்ரகமுவ மாகாணத்தில் 45 மாகாணப் பாடசாலைகளின் பயன்பாட்டிற்காக ரூபா 13.07 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட அறிவியல் சார்ந்த கருவிகள், உபகரணங்களின் தரக்குறைவு காரணமாக தொடர்புடைய பாடசாலைகளினால் பயன்படுத்தப்படாது தொடர்ந்தும் காணப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களின் பயன்பாட்டை கண்காணிப்பதற்கு மற்றும் செயற்திட்டக் காலப்பகுதியின் போது நாடாளாவிய ரீதியில் பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்கு எவ்வித பொறிமுறையும் தாபிக்கப்படவில்லை.